179

RMD-B

2005

தபால் 26 ஜூலை 2005 C66696 சென்னை-600 002

தபால் 28 ஜூலை 2005 சென்னை-600 00 C66995

சுருக்கம்

பொதுப்பணிகள் – கல்வித்தகுதிகள் – புதுடெல்லி இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தால் ஜனவரி 2000 முதல் வழங்கப்படும் பி.எட்., (B.Ed.) பட்டத்தினை தமிழகப் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.எட். பட்டத்திற்கு இணையாக வேலை வாய்ப்பு மற்றும் பதவி உயர்விற்கு உரிய தகுதியாக அங்கீகரித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (எம்2) துறை

அரசாணை (நிலை) எண். 129 நாள்: 8.7.05

படிக்கப்பட்டவை

1. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 20.12.93.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 63808/கே2/2003 நாள் 16.10.2003.
3. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.101588/சி5/சி19/2003 நாள் 19.8.2004 மற்றும் 22.9.2004.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.1381/ஆர்என்.டி.எஃப்.1/04 நாள் 9.11.2004.
5. அரசாணை (நிலை) எண்.160, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2.12.2004.

*****

மேலும் படிக்க

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 2 கடித எண்.1381/ஆர்.என்.டி.எஃப்.1/04 நாள் 15.2.05.

*****

ஆணை:

மேலே படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதங்களில், புதுடெல்லி இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.எட்., (B.Ed.) பட்டச் சான்றினை தமிழகப் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.எட். (B.Ed.) பட்டத்திற்கு இணையானதாக மதிப்பீடு செய்து அதனை தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் பள்ளி உதவி ஆசிரியர் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு தகுதியானதாகக் கருத அரசின் ஆணை கோரப்பட்டது.

2. மேற்காணும் கருத்துரு மீது தேர்வாணைய இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையைப் பெற்று அனுப்புமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. 08.11.2004 அன்று நடைபெற்ற இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் சிறப்பு கலந்தாய்வுக் கூட்டத்தில், இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தால் ஜனவரி 2000 முதல் வழங்கப்படும் பி.எட்., (B.Ed.) பட்டத்தினை தமிழகப் பல்கலைக்

கழகங்களால் வழங்கப்படும் பி.எட்., (B.Ed.) பட்டத்திற்கு இணையாக வேலை வாய்ப்பு மற்றும் பதவி உயர்விற்காக கருதி அங்கீகரித்தல் எனும் பொருள் மீது "Recommended as equivalent since inception of B.Ed.. programme by Indira Gandhi National Open University" என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது எனவும், மேற்காண் குழுவின் பரிந்துரையின் மீது அரசாணை வெளியிடுமாறும் மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் தேர்வாணையம் கேட்டுக் கொண்டது. மேற்படி பரிந்துரை மீது பார்வை 5ல் குறிப்பிட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது 15.2.2005 நாளிட்டக் கடிதத்தில் பார்வை 5ல் வெளியாகியுள்ள அரசாணை 8.11.04 அன்று நடைபெற்ற இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரைக்கு சற்று மாறுபட்டுள்ளது என்றும், மேற்படி அரசாணைக்கு இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் ஜனவரி 2000 முதல் வழங்கப்படும் பி.எட்., (B.Ed..) பட்டத்தினை தமிழகப் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.எட்., (B.Ed..) பட்டத்திற்கு இணையாக வேலை வாய்ப்பு மற்றும் பதவி உயர்விற்கு கருதலாம் என திருத்தம் வெளியிடுமாறு கேட்டுக் கொண்டது.

5. மேற்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்துக்களை அரசு ஆய்வு செய்து மேலே பார்வை 5ல் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளை இதன் மூலம் இரத்து செய்துவிட்டு 8.11.2004 அன்று நடைபெற்ற இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் "நியு டெல்லி இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.எட்., (B.Ed..) படிப்பு" பற்றியப் பரிந்துரை மீது புதிதாக ஆணை வெளியிட தீர்மானிக்கிறது.

6. அதன்படி இணைக் கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையை அரசு நன்கு பரிசீலித்த பின் அதனை ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தால் ஜனவரி 2000 முதல் வழங்கப்படும் பி.எட்., (B.Ed.) பட்டத்தினை தமிழகப் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.எட். பட்டத்திற்கு இணையாக வேலை வாய்ப்பு மற்றும் பதவி உயர்விற்கு கருதலாம் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்
அரசுச் செயலாளர்

பெறுநர்.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி, சென்னை – 6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம், சென்னை – 2.
பதிவாளர்கள், தமிழகப் பல்கலைக் கழகங்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 9/18/35.
நகல்
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பணி ஆர்) துறை, சென்னை – 9.
அரசாணை (நிலை) எண்.160, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2.12.2004க்கு.

// ஆணைப்படி // அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

Subtd to S.O
May be transfered to RMD-'B' Sec
'thro' Thappal Section.